**Judicial Form No.53**
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.** 483 **/ 2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் **ம.சா. 1** - வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 1 | தொழில் | - | டியூஷன் டீச்சர். |
| பெயர். | - | திருமதி. சங்கீதா | வட்டம் | - | |
| க/பெ. | - | பாக்கியராஜ் | வயது | - | 38 |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |

**28.01.2025**

**1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

முதல் விசாரணை.

1. நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து டியூசன் டீச்சராக வேலை செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 14 வருடம் ஆகிறது. 1வது எதிரி எனது கணவர். அவருடன் நான் திருமணமாகி சுமார் 6 வருடம் குடும்பம் நடத்தினேன். எங்களுக்குள் கொஞ்சம் கருத்து வேறுபாடு இருந்தது. குழந்தை இல்லை என்று டீரீட்மெண்ட் எடுப்பது சம்மந்தமாக எங்களுக்குள் கருத்துதொற்றுமை கிடையாது.

2. எங்கள் வீட்டில் முறைப்படி என்ன செய்யவேண்டுமோ எல்லாவற்றையும் செய்து சீர் வரிசை கொடுத்து திருமணம் செய்து வைத்தார்கள். கொஞ்ச நாள் கழித்து 1வது எதிரியின் நடவடிக்கை சரியில்லை. 1வது எதிரி தீபாவளி சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் பணம் பெற்று வட்டிக்கு விட்டு வந்தார். அந்த வகையில் கண்ணாரம்பட்டில் ஒரு பெண்ணோடு 1வது எதிரிக்கு தகாத உறவு இருந்தது. கொஞ்ச நாள் கழித்து 6 வருடம் வாக்கில் எங்களுக்குள்

கருத்து வேறுபாடு ஏற்பட்டு இவர் காணாமல் போய்விட்டார். அதே ஊரில்தான் இருக்கிறார் ஆனால் தலைமறைவாக இருந்தார்.

3. அதன் பிறகு 3 வருடமாக அம்மாவீட்டில்தான் இருந்தேன். கருத்துவேறுபாடு காரணமாகத்தான் இவர் தலைமறைவாக இருப்பதாக நான் நினைத்திருந்தேன். ஆனால் இவர் வேறுறோரு பெண்ணுடன் தகாத உறவில் இருந்ததால்தான் அவ்வாறு இருந்துள்ளார் என்று தெரிந்தது. அவர்களுக்கிடையே ஒரு குழந்தை இருப்பதும் பின்னால் எனக்கு தெரிந்தது. இதற்கு 1வது எதிரியின் பெற்றோர்கள் பாண்டியன், சிவசங்கரன் ( 3,4 எதிரிகள்) உடந்தையாக இருந்தார்கள்.

4. இது தெரிந்தபிறகுதான் நான் உளூந்தூர்பேட்டை மகளிர் காவல் நிலையத்தில் கேஸ் கொடுத்தேன். கேஸ்கொடுத்தது தெரிந்தவுடன் வீட்டில் வந்து பயங்கரமாக பிரச்சனை செய்தும் ஹோண்டா ஷோரூமில் நான் வேலை செய்த இடத்தில் வந்து சண்டை போட்டு பிரச்சனை செய்தார். அதன் பிறகு நான் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் வந்து புகார் செய்தேன். அதற்கு சி.எஸ்.ஆர். நகல் கொடுத்துள்ளார்கள். **அந்த சி.எஸ்.ஆர். நகல் ம.சா.ஆ.1 ஆகும்**.

5. இதெல்லாம் தெரிந்த பிறகு 1வது எதிரி நான் வேறு ஒரு பெண்ணுடன் கல்யாணம் செய்துகொண்டுவிட்டேன் அதனால் நீ எனக்கு விவாகரத்து கொடுத்தே ஆகவேண்டும் என்று சொல்லி மெண்டல் டார்ச்சர் கொடுத்தார். இதற்கு ஆதாரமாக உன்னிடம் எந்த எவிடன்ஸ்சும் இல்லை ரேஷன் கார்டில் இருந்து எனது பெயரை எடுத்துவிட்டார். சமீபத்தில் இவர் திருந்தி வருவார் என்று காத்திருந்தேன்.

6. அதன் பிறகு அவர்களுக்குள் 2 வது குழந்தையும் பிறந்துவிட்டது. 2021-2024 க்குள் இரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டது. இவர்களுக்குள் குழந்தை பிறந்தவுடன் என்னை மறுபடியும் வந்து டார்ச்சர் பண்ண ஆரம்பித்துவிட்டார். நியாய விலை கடையில் அவருக்கு அரசாங்க வேலை வந்துள்ளது. 2022 வது வருடத்தில் கேஸ்சை வாபஸ் வாங்க சொல்லி அங்கிருந்து எனக்கு பிரச்சனை செய்தார்.

7. கவர்மெண்ட் உத்தரவு வருவதற்காக கேஸ்சை வாபஸ் வாங்கி சொல்லி சொந்தக்காரர்களிடம் சொல்லி கேட்கச்சொன்னார். அரசு அதிகாரியும் எனக்கு போன் செய்து பிரச்சனையை சரி செய்ய சொல்லி சொன்னார். இந்த வழக்கு போட்ட பிறகு எனக்கு போட்ட பொருட்கள் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார். உன்னுடன் என்னால் வாழ முடியாது எனக்கு விவாகரத்து கொடுத்துவிடு என்று சொல்லிவிட்டார்.

8. திருமணமாகி 14 வருடம் ஆகிறது. 14 வருடத்தில் 6 வருடங்கள்தான் அவருடன் இருந்தேன். தற்போது 3 வருடமாக பிரச்சனை அதிகமாகிவிட்டது. தற்போது அவர் விவாகரத்து கொடுத்தே ஆகவேண்டும் என்று சொல்கிறார். என்னுடைய வாழ்க்கை என்ன ஆவது என்று சாட்சி கேட்கிறார். வேறு ஒரு பெண்ணுடன் 1வது எதிரி தற்போது வாழ்ந்து வருகிறார். எனக்கு இவ்வளவு நெருக்கடி கொடுத்து பிரச்சனை செய்தும் நான் தற்போது ரூ.5000/- சம்பளத்தில் டியூஷன் வேலை செய்து வருகிறேன். தற்பொழுதும் என்னை மனஉலச்சலுக்கு ஆளாக்கிவிட்டு தொந்தரவு செய்து வருகிறார்.

9. திருமணமாகி 14 வருடமாகி தற்போதும் எனக்கு கொடச்சல் கொடுத்துக்கொண்டு வேலைக்கு போகும் இடமெல்லாம் பிரச்சனை செய்து வருகிறார். அவருடைய உறவினர்கள் எல்லாம் விவாகரத்து கொடுக்கச்சொல்லி என்னை தொந்தரவு செய்து வருகிறார்கள். இந்த வழக்கை எனது வாழ்க்கைக்கு அவர் என்ன செய்யபோகிறார் என்பதற்காகவே போட்டுள்ளேன். திருமணமான பிறகு மன உலச்சலில் எனது அப்பா இறந்து 14 வருடம் ஆகிறது. எனது வாழ்க்கை தற்போது கேள்விக்குறியாகிவுள்ளது. எல்லா பொருளையும் என்னுடைய தகுத்திக்கேற்றவாறு கொடுத்து எனது மகள் சந்தோஷமாக வாழமுடியவில்லையே என்ற மனவருத்தில் எனது அப்பா இறந்துவிட்டார். இதற்காகத்தான் நீதி கேட்டு வழக்கு போட்டுள்ளேன்.

10. எனக்கும், 1வது எதிரிக்கும் இடையே நடந்த திருமணத்திற்கான **திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.2 ஆகும்**. 1வது எதிரிக்கு 2வது திருமணம் செய்த வகையில் பிறந்த குழந்தைக்கான பிறப்பு சான்றிதழை இணையவழி மூலம் பெற்றதற்கான **இணையவழி சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆகும்**. எனக்கும் 1வது எதிரிக்கும் இடையே நடந்த திருமணத்தை பதிவு செய்ததற்கான **பதிவு சான்றிதழ் அசல் ம.சா.ஆ.4**. 1வது எதிரியின் **ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.5** ஆகும். எனக்கும் 1வது எதிரிக்கும் நடந்த திருமணத்தின்போது செய்த **சீர் வரிசை பட்டியல் விபரங்கள் நகல் ம.சா.ஆ.6 ஆகும்**. எனக்கும் 1வது எதிரிக்கும் திருமணத்தின்போது எடுத்த **திருமண புகைப்படம் ம.சா.ஆ.7.** திருமணத்தின்போது செய்த சீர்வரிசைகளை காண்பிக்கும் புகைப்படம் புகைப்படங்கள் (2 எண்ணிக்கைகள்) **ம.சா.ஆ.8.** இதற்கு என்ன குற்றமோ அதை கொடுக்க வேண்டுகிறேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

1வது எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1வது எதிரியின் வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.